(*b*) whether there is any proposal to include Sethubavachatram Block to be started in 1959–60;

(*c*) whether the Government are aware of the priority list of Blocks for Thanjavur district approved by the Thanjavur District Planning Board; and

(*d*) how many new Blocks are proposed to be started in the Thanjavur district in 1959–60 and what they are?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) 2nd October 1956.

(*b*) The Sethubavachatram Block has since been taken up as a Pre-extension Block with effect from 1st October 1959.

(*c*) Yes, Sir.

(*d*) During the year 1959–60, two Blocks were allotted to the Thanjavur district, viz., Budalur and Sethubavachatram.

Fertilisers

*227 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI P. U. SHANMUGAM): கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1958-59, 1959-60-ம் ஆண்டுகளுக்காக மத்திய சர்க்காரிடம் நம் மாகாண சர்க்கார் கோரிய இரசாயன உர அளவு எவ்வளவு?

(ஆ) கிடைத்த அளவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) and (*b*) a paper[a] is placed on the Table of the house.

SRI S. M. ANNAMALAI: ஸார், மேஜைமேல் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் 1959-60-ம் ஆண்டுக்கு மத்திய சர்க்காரைக் கேட்டது 2,93,400 டன்; ஆனால் அவர்கள் கொடுத்தது 76,757 டன், என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு மத்திய சர்க்கார் 4-ல் ஒரு பங்குதான் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் மேலும் வற்புறுத்தி மத்திய அரசாங்கத்தினிடமிருந்து இன்னும் அதிகமான இரசாயன உரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது நாம் கேட்பதிலே பாதி கிடைக்கிறது. எல்லா ராஜ்யங்களுக்கும் பாதிதான் அவர்களால் சப்ளை செய்ய முடிகிறது. இந்த ராஜ்யத்துக்கும் பாதிக்குக் குறையாமல் வருகிறது. இந்தப் புள்ளி விவரங்கள் வருஷம் பூராவுக்கும் உள்ள புள்ளி விவரங்கள் அல்ல. இன்னும் வரவேண்டியிருக்கிறது.

SRI S. LAZAR: ஜில்லா வாரியாக ஒதுக்கப்பட்ட கோட்டா கூட அந்தந்த ஜில்லாக்களுக்குத் தக்க காலத்தில் வந்து சேருவதில்லை என்ற புகார் வந்திருக்கிறதா? தக்க காலத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கையைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளுமா?

---

a Printed as Appendix I on page 568 infra.

LIBRARY 16 APR 1960 STATE LEGISLATURE MADRAS

[17th December 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : [illegible] வுக்குக் கொடுக்க முடியாததால் புகார் வருகிறது. கூடியவரை அந்தந்தப் பருவத்துக்குத் தகுந்தவாறு, எந்தெந்த ஜில்லாக் களுக்குக் கொடுக்கவேண்டுமோ அந்த முறையில் எந்தெந்த ஜில்லாக்களுக்கு அவசரமாக வேண்டியிருக்கிறதோ அங்கெல்லாம் உடனடியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI K. RAMACHANDRAN : மேஜை மேல் வைக்கப்பட் டிருக்கும் குறிப்பிலே, 1958-59-க்கு 82,400 டன்னும், 1959-60க்கு 30,872 டன்னும் அம்மோனியம் சல்பேட் கிடைத்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1959-60-க்கு ஏன் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கொடுத்திருக்கக் கூடியது இரண்டாவது, வருஷம் பூராவுக்கும் அல்ல. முதல் 6 மாதத்திற்குத்தான். இன்னும் பூராவும் வந்து சேரவில்லை.

SRI T. T. DANIEL : May I know what exactly is the difficult of the Central Government in supplying the whole quantity which we are demanding?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The difficulty of the Central Government is, they are not able to get as much as the States require.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு எக்கருக்கு 100 பவுண்டு என்ற விகிதத்தில் கணக்கிட்டிருக் கிறார்கள். அதன்படி கணக்கிட்டுப் பார்த்தால் நம்முடைய நாட்டி லிருக்கும் நஞ்சை நிலங்களுக்கு மட்டும் 2½ லட்சம் டன் உரம் தேவைப்படுகிறது. புஞ்சைக்கும் சேர்த்து 3 லட்சம் டன் தேவைப் படுகிறது. நாம் கேட்பதிலே பாதிதான் கிடைக்கிற காரணத் தினால் கேட்கும்போதே ஏன் அதிகமாகக் கேட்கக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே ஒன்றும் வஞ்சனை இல்லை. பேரம் இல்லை. அவர்களிடம் இருப்பதைத்தான் பகிர்ந்து கொடுக்கிறார்கள். உரத் தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகியிருந்தும் போதவில்லை. இறக்குமதியும் ஆகிறது. ஓரளவுக் குத்தான் இறக்குமதி செய்ய முடியும். அதற்குமேல் இறக்குமதி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அடுத்த ஆண்டில் இன்னும் கொஞ்சம் அதிக இறக்குமதி செய்யப்பட்டு அதிகமாக ராஜ்யங் களுக்குக் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : Are we to approach only the Government of India for getting fertilisers? If we do not get sufficient quantity from them can we import from States like Kerala wherein fertilisers are produced by some factories?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Fertilisers produced in the factories in various States are put in the general pool and that is distributed by the Central Government to various States. That quantity is not sufficient at all. Therefore fertilisers are also

[17th December 1959

imported from various countries subject to the availability of foreign exchange. I do expect that more foreign exchange will be made available for the import of fertilisers in the next year.

SRI R. KRISHNASAMI NAIDU : சபாநாயகர் அவர்களே, ஜில்லாக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இரசாயன உரம் கோட்டா விகிதங்கள் அங்குள்ள தேவையையும் அங்கு இதுவரை உபயோகப் படுத்தி வரும் அளவையும் பார்த்து நிர்ணயிக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இப்போது ஒவ்வொரு ஜில்லாவின் தேவை, உபயோகப்படுத்தும் அளவு ஆகியவற்றைப் பார்த்து அந்தக் கோட்டாவைப் புனர் நிர்ணயம் செய்ய ஏற்பாடுகள் செய்யப் படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்வாறெல்லாம் ஏற்படுவதற்குக் காரணம் பற்றாக்குறைதான். ஆனால் கலெக்டர் கள் அந்தந்த ஜில்லாவின் நிலைமையை மீண்டும் மீண்டும் பரிசீலனை செய்து எந்த விகிதத்தில் சப்ளை செய்யவேண்டுமென்று தெரிவிக் கிறார்களோ அந்த விகிதத்தில் அவர்களைக் கலந்துதான் விநியோகிக்கப்படுகிறது. — — — —

SRI A. R. SUBBIAH MUDALIYAR : "நான்-லைசென்ஸ் டீலர் கள்" சில சமயங்களில் "பர்மிலைசர்" விற்கிறார்கள். அவர்களைக் கேட்டால் சர்ப்ளஸ் ப்ராவின்ஸிலிருந்து கிடைத்தது என்று சொல்லுகிறார்கள். இதில் உள்ள உண்மை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மற்ற ராஜ்யங் களிலிருந்து வருகிறது என்றால், நாம் கவனிக்க முடியாது. பற்றாக்குறை இருப்பதால் கள்ள மார்க்கட் ஏற்படுகிறது. அதனால் லைசென்ஸ் இல்லாதவர்கள் வாங்கி விற்கிறார்கள். இந்த ராஜ்யத்தைப் பற்றித்தான் கவனிக்க முடியுமே தவிர மற்ற ராஜ்யங்களைப் பற்றி ஒன்றும் செய்ய முடியாது.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், பகிரங்கமாக அதிக விலைக்குக் கடைகளிலே லைசென்ஸ்தார்கள் விற்கிறார்களே. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இருக்கிறதா ? விலைக் கட்டுப்பாட்டை அமல் நடத்த என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிக விலைக்கு விற்பதாகத் தகவல் கிடைத்தால் அவருடைய லைசென்ஸ் ரத்து செய்யப்படுகிறது.

SRI K. B. S. MANI : இந்த ஆண்டு கோட்டா இன்னும் வர வேண்டியிருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டாவது கோட்டா எப்போது வரும் ? எந்தக் காலத் தில் சப்ளை செய்யப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது வந்து கொண்டேயிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : நமக்குக் கிடைக்கக்கூடிய இந்தக் குறைந்தபட்ச இரசாயன உரத்தையும் கூட ஒன்றுக்கு இரண்டு மடங்கு விலையில் கள்ள மார்க்கட்டில் விற்கப்பட்டு

வருகிறது என்று பல ஜில்லாக்களில் இருந்து புகார்கள் வந்திருக்கின்றனவா? அவைகளின் பேரில் கடுமையான நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல ஜில்லாக்களிலிருந்து அவ்வாறு வந்திருக்கிறது என்று சொல்லுவதற்கில்லை. கேள்வி கேட்ட அங்கத்தினர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு தகவல் கொடுத்தார்கள். அதை விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன்.

Public Prosecutor, Tiruchirappalli

* 228 Q.—SRI K. ANBAZHAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state the action taken by the Government on certain observations of the High Court of Madras in the appeal filed by the State Government against the acquittal in the Public Prosecutor Acid throwing case, Tiruchirappalli?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Since the term of Office of the Public Prosecutor, Tiruchirappalli, is to expire on the 1st January, 1960, Government do not propose to take any action.

SRI K. ANBAZHAGAN : அந்த பப்ளிக் பிராசிகியூடர் மீது திராவகம் ஊற்றியது சம்பந்தமாகத் தொடுக்கப்பட்ட வழக்கில் நிரபராதிகள் என்று விடுவிக்கப்பட்டவர்கள் மீது மறுபடியும் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்தபொழுது அந்த பப்ளிக் ப்ராசிகியூட்டரின் தரம் எந்த வகையிலே குறைந்திருக்கிறது என்ற கருத்தை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு தெரிவித்திருக்கிறதா? அப்படிப்பட்ட தரக்குறைவாக இருக்கக்கூடியவர்கள் பதவியிலிருந்து தானாகவே விலகிக்கொள்ளும் வரையில் அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமா? அல்லது அப்படிப் பட்டவர்கள் மீது முன்னதாக நடவடிக்கை எடுப்பதற்கு திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உயர்நீதி மன்றம் சில அபிப்பிராயங்களை தெரிவித்திருக்கிறது. அரசாங்கம் இதை கவனித்து தக்கது செய்யும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதன்பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது பற்றி இந்தக் கேள்வி. ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது என்றால் முறைப்படிதான் எடுத்துகொள்ளவேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது இந்த பப்ளிக் பிராசிகியூடர் பதவி காலம் சீக்கிரத்திலேயே முடிவடைகிறது. அதற்குமேல் நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் பயன் இல்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

SRI M. P. SUBRAMANIAM : இந்த அப்பீல் வழக்கில் உயர் நீதி மன்றம் இந்த திருச்சி பப்ளிக் பிராசிகியூட்டர்மீது என்னவித கருத்துக்கள் தெரிவித்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கூறமுடியுமா?

MR. SPEAKER : The hon. Member must put a separate question.